சுருக்கம்

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீட்டிற்கு தற்போது பின்பற்றப்படும் இன சுழற்சி முறையினை மாற்றியமைத்தல் – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.4)துறை

அரசாணை(நிலை) எண்.87

நாள் : 17.7.2008
திருவள்ளுவர் ஆண்டு 2038
ஆடி திங்கள் 2ம் நாள்

1) அரசாணை (நிலை) எண். 200, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 22.12.2006

2) அரசாணை (நிலை) எண். 241, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29.10.2007

3) அரசு கடித எண். 51428/கே.2/2007–3, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 29.10.2007

மேலும் படிக்கவும்:

4) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 186/ஆர்.என்.டி–92/2000, நாள்: 3.1.2008 ஆர்.என்.டி.–92/2000, நாள் : 30.10.2007 மற்றும் நாள் 3.1.2008

5) ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடிதம் ஆர்.ஒ.சி. எண்.804/ஆர் 3–1/2007, நாள் 5.5.2008

6) அரசாணை (நிலை) எண் 101 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 30.5.2008

********

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மத்திய அரசில் கணக்கிடுவது போன்று இம்மாநிலத்திலும் அரசு துறைகள், கழகங்கள் மற்றும் வாரியங்களில் 100 புள்ளி கணக்கீடு பதிவேட்டில் ஊனமுற்றோருக்கான காலி பணியிடங்கள் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு 33 காலிப்பணியிடங்களுக்குள் ஒரு ஊனமுற்றவரை தேர்வு செய்து இன சுழற்சி பட்டியலில் (Communal rostor) அவர் சார்ந்த இனத்திற்கு எதிராக அவரின் தேர்வை கணக்கிடும் முறையை கடைபிடிக்க அரசாணை வெளியிடப்பட்டது. தற்போது மேலே இரண்டு, மூன்று மற்றும் ஆறில் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் கடிதத்தில் பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியருக்கு தலா 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு 200 புள்ளி கணக்கீடு முறை பின்பற்ற ஆணைகள் வெளியிடப்பட்டதையடுத்து தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகள் பொது விதி 22 (aa)–க்கு திருத்தம் வெளியிடும்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலாளர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர். அதன்படி இக்கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த பின்னர் அரசு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்க்காணும் திருத்தம் வெளியிட்டு ஆணையிடுகிறது.

## திருத்தம்

அரசாணை நிலைஎண் 200, சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை, நாள் 22.12.2006ல் தற்போதுள்ள பத்தி 5(அ)க்கு பதிலாக பின்வருமாறு மாற்றி படிக்கவும்.

(அ) "இம்மாநிலத்திலுள்ள அரசு துறைகள், கழகங்கள் மற்றும் வாரியங்களில் 200 புள்ளி கணக்கீடு பதிவேட்டை 6 (ஆறு) கட்டங்களாக பிரித்து (ஊனமுற்றோரின் மூன்று இனங்களில் அதாவது பார்வையற்றவர், காதுகோளாதோர், மற்றும் கைகால் ஊனமுற்றோர் ஆகியோருக்கு முடிந்தவரை தலா **1:1:1** வீதம் சமமாக வழங்கி) ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள 33 காலி பணியிடங்களுக்குள் ஒரு ஊனமுற்றவரை தேர்வு செய்து (உம். 1–33, 34–66, 67–100, 101–133, 134–166 மற்றும் 167–200) இன சுழற்சி பட்டியலில் (Communal roster) அவர் சார்ந்த இனத்துக்கு எதிராக அவரின் தேர்வை கணக்கிடும் முறையை கடைபிடிக்க அரசு ஆணையிடுகிறது.

2 தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின் பொதுவிதி 22 (aa)–க்கு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையில் தேவையான திருத்தம் வெளியிடப்படும்

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,– சென்னை 6
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை 2
அனைத்துத் துறை செயலாளார்கள், சென்னை–9
அனைத்துத் துறை தலைவர்கள் / தமிழ்நாடு அரசு நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகள்
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்
தலைமைக் கணக்காயர், சென்னை 18/35
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 5/35/79/9
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 104
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, சென்னை – 2
(அரசிதழில் வெளியிட)
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை –6

நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
சமூக நலத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை – 9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை (எஸ்) சென்னை 9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 9
பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
சென்னை – 9
சட்டத்துறை, சென்னை 9
நிதித்துறை, சென்னை – 9
சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் அனைத்து பிரிவுகள்,
சென்னை – 9
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//